**<u>சார்பு நீதிமன்றம், துறையூர்.</u>**

**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

**<u>OS.No.13/2023</u>**

தேதி: 22.09.2025

பெயர் : அனுசியா (வா.சா.1) க/பெ: குலோத்துங்கன்

**<u>5ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

1. என்ன பரிகாரம் வேண்டி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்து வேண்டி தாக்கல் செய்துள்ளேன். ரகுபதி என்னுடைய கொழுந்தனார். சுரேகா என்னுடைய நாத்தனார் மகள். 5ம் பிரதிவாதி என் கணவரின் மூத்த சகோதரியின் மகள் ஆவார். தாவா சொத்து செங்காட்டுப்பட்டி கிராமத்தில் உள்ளது. தாவா சொத்து வீடு என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு இன்னும்பாகம் பிரிக்கப்படவில்லை. அந்த சொத்து என்னுடைய மாமனார் ரங்காமிக்கு பாத்தியப்பட்டது. அந்த சொத்தை தவிர என் மாமனாருக்கு வேறு சொத்துக்கள் இருந்தது. அதை அவர் விற்றுவிட்டார். தற்போது வேறு சொத்துக்கள் இல்லை. என் கணவருடன் பிறந்தவர்கள் இரண்டு சகோதரிகள், இரண்டு சகோதரர்கள் ஆவார். இரண்டு சகோதரிகளுக்கும் திருமணத்தின்போது சீர்வரிசை செய்தார்களா என்றால் இல்லை, செய்வதாக கூறினார்கள். நான் சொல்வது போல் சீர்வரிசைகள் செய்யவில்லை என பொய்யாக கூறுகிறேன் எனவும், திருமணத்தின்போது அவர்களுக்கு சீர்வரிசைகள் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. திருமணம் முடிந்து செங்காட்டுப்பட்டியில் தான் குடியிருந்தேன். வா.சா.ஆ.23 புகைப்படம் செங்காட்டுப்பட்டி வீட்டில் உள்ள ஹாலில் எடுத்தது. என் மாமனார் உயிருடன் இருந்தபோது கூட்டுக்குடும்பமாக இருந்தோம். 5ம் பிரதிவாதி இந்த வழக்கில் என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளார் என தெரியுமா என்றால் தெரியும். அவர் அம்மாவுக்கு சேரவேண்டிய சொத்து அவருக்கு வேண்டும் என கேட்டுள்ளார்.

2. என் மாமனார் உயிருடன் இருக்கும்வரை சொத்துக்களை யாருக்கும் எழுதி வைக்கவில்லை எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். 5ம் பிரதிவாதியின் அம்மா மணிமேகலைக்கு

திருமணத்தின்போது சீர்வரிசைகள் செய்யவில்லை என்றால் ஆமாம். பின்னர் செய்வதாக கூறினார்கள். அதனால் தான் அவர்கள் வழக்கு சொத்தில் பாகம் கேட்கிறார்கள் என்றால் சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகள், 5ம் பிரதிவாதிக்கு சேர வேண்டிய சொத்தை ஏமாற்றுவதற்காக நான் அவர்களுடன் சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதியை பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

/ உண்மை நகல்/

(ஓம்/-C.விஜய்கார்த்திக்)
சார்பு நீதிபதி,
துறையூர்.